# சாக்ரமெண்டோ தமிழ் மன்றம்
# திருக்குறள் போட்டி 2021
# குழு 2 (வயது: 7-12)

| எண் | குறள் எண் | அதிகாரம் | குறள் | குறள் விளக்கம் |
|---|---|---|---|---|
| 1 | 11 | வான்சிறப்பு | வானின் றுலகம் வழங்கி வருதலால்<br>தானமிழ்தம் என்றுணரற் பாற்று | மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும் |
| 2 | 28 | நீத்தார் பெருமை | நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து<br>மறைமொழி காட்டி விடும் | பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும். |
| 3 | 40 | அறன் வலியுறுத்தல் | செயற்பால தோரும் அறனே ஒருவற்கு<br>உயற்பால தோரும் பழி | ஒருவன் செய்யத் தக்கது அறமே; விட்டுவிடத் தக்கவை தீய செயல்களே. |
| 4 | 60 | வாழ்க்கைத் துணைநலம் | மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்<br>நன்கலம் நன்மக்கட் பேறு | மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்: நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்லணிகலம் என்று கூறுவர். |
| 5 | 66 | மக்கட்பேறு | குழலினி தியாழினி தென்பதம் மக்கள்<br>மழலைச்சொல் கேளா தவர் | பெற்ற பிள்ளைகள் பேசும் பொருளற்ற மழலைச் சொல்லைக் கேட்காதவர்தாம், குழலும் யாழும் கேட்க இனியவை என்பர் |
| 6 | 71 | அன்புடைமை | அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்<br>புண்கணீர் பூசல் தரும் | அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே ( உள்ளே இருக்கும் அன்பைப் ) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் |
| 7 | 81 | விருந்தோம்பல் | இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்<br>விருந்தோம்பி<br>வேளாண்மை செய்தற் பொருட்டு | வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும் |
| 8 | 100 | இனியவை கூறல் | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று | மனத்திற்கு இன்பம் தரும் சொற்கள் இருக்க, அவற்றை விட்டுவிட்டுத் துன்பம் தரும் சொற்களைக் கூறுவது, நல்ல பழம் இருக்க நச்சுக்காயை உண்பது போலாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 103 | செய்ந்நன்றியறிதல் | பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது | இன்ன பயன் கிடைக்கும் என்றுஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிட பெரியதாகும் . |
| 10 | 114 | நடுவுநிலைமை | தக்கார் தகவிலர் என்ப தவரவர் எச்சத்தாற் காணப் படும் | நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும். |
| 11 | 129 | அடக்கம் உடைமை | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு | தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும்; ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது. |
| 12 | 169 | அழுக்காறாமை | அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும் | பொறாமை பொருந்திய நெஞ்சத்தானுடைய ஆக்கமும், பொறாமை இல்லாத நல்லவனுடைய கேடும் ஆராயத் தக்கவை |
| 13 | 181 | புறங்கூறாமை | அறங்கூறா னல்ல செயினும் ஒருவன் புறங்கூறா னென்றல் இனிது | ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும், அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால் அதுவே அவனுக்கு நல்லது |
| 14 | 195 | பயனில சொல்லாமை | சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில நீர்மை யுடையார் சொலின் | இனிய குணத்தவர் பயனற்ற சொற்களைச் சொன்னால், அவர் பெருமையும், புகழும் அப்பொழுதே நீங்கிவிடும். |
| 15 | 202 | தீவினையச்சம் | தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும் | தீயசெயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத் தீயச் செயல்கள் தீயைவிடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்படும் |
| 16 | 214 | ஒப்புரவறிதல் | ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும் | உழைக்கும் சக்தி அற்றவர்க்கு உதவுபவனே உயிரோடு வாழ்பவன். உதவாதவன் இருந்தாலும் இறந்தவனாகவே எண்ணப்படுவான். |
| 17 | 231 | புகழ் | ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல தூதிய மில்லை உயிர்க்கு | வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும், அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை. |
| 18 | 280 | கூடா ஒழுக்கம் | மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்த தொழித்து விடின் | உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு விட்டால் மொட்டை அடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | 282 | கள்ளாமை | களவினா லாகிய ஆக்கம் அளவிறந்<br>தாவது போலக் கெடும் | திருடுவதால் வரும் செல்வம், பெருகுவது போலத் தோன்றி விரைவில் அழியும். |
| 20 | 299 | வாய்மை | எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்<br>பொய்யா விளக்கே விளக்கு | உலகத்து இருட்டைப் போக்கும் விளக்குகள், விளக்கு ஆகா; பொய் சொல்லாமை என்னும் விளக்கே சான்றோர்க்கு விளக்கு ஆகும். |
| 21 | 303 | வெகுளாமை | மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய<br>பிறத்தல் அதனான் வரும் | தீமை வருவது எல்லாம் கோபத்தால்தான்; அதனால் எவரிடமானாலும் சரி, கோபம் கொள்வதை விட்டுவிடுக. |
| 22 | 318 | இன்னா செய்யாமை | தன்னுயிர்க் கின்னாமை தானறிவான்<br>என்கொலோ<br>மன்னுயிர்க் கின்னா செயல் | தன் உயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், அத் துன்பத்தை மற்ற உயிருக்குச் செய்தல் என்ன காரணத்தாலோ. |
| 23 | 333 | நிலையாமை | அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்<br>அற்குப ஆங்கே செயல் | நிலையாத இயல்பினை உடையது செல்வம்; அது கிடைத்தால் நிலையான அறங்களைச் செய்க. |
| 24 | 339 | நிலையாமை | உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி<br>விழிப்பது போலும் பிறப்பு | உறங்குவது போன்றது சாவு; உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு. |
| 25 | 369 | அவா அறுத்தல் | இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்<br>துன்பத்துள் துன்பங் கெடின் | ஆசை எனப்படும் பெருந்துன்பம் இல்லாது போனால், இன்பம் இடைவிடாமல் வரும். |
| 26 | 388 | இறைமாட்சி | முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்<br>கிறையென்று வைக்கப் படும் | நீதிவழங்கி மக்களைக் காக்கும் அரசு மக்களைக் காக்கும் கடவுள் என்று கருதப்படும். |
| 27 | 393 | கல்வி | கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு<br>புண்ணுடையர் கல்லா தவர் | கற்றவரே கண் உடையவர்; கல்லாதவரோ முகத்தில் இரண்டு புண்ணையே உடையவர். |
| 28 | 403 | கல்லாமை | கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்<br>சொல்லா திருக்கப் பெறின் | கற்றவர் அவையில் பேசாதிருந்தால் படிக்காதவரும் மிகநல்லவரே |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | 416 | கேள்வி | எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்<br>ஆன்ற பெருமை தரும் | சிறிது நேரமே என்றாலும் உறுதி தரம் நற்பொருளைக்<br>கேட்க வேண்டும். அதுகூட நிறைந்த பெருமையைத் தரும். |
| 30 | 645 | சொல்வன்மை | சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல்<br>அச்சொல்லை<br>வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து | தாம் சொல்லும் சொல்லை வெல்ல, வேறொரு சொல்<br>இல்லை என்பதை அறிந்து சொல்லுக. |